# 7 சிலுவைத் தொனிகள்



Eva. D. ஜேந்திரம்

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# 7 சிலுவைத் தொனிகள்

"வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப் போலச் செழிக்கும்" (ஏசா.35:1).

Eva. D. A. இராஜேந்திரம்

WORD OF CHRIST WOC

கிறிஸ்துவின் வார்த்தை நூல் நிலையம்
சென்னை, இந்தியா

7 சிலுவைத் தொனிகள்

Copyright © 2011 D.A. Rajendram

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording, or otherwise without the prior written permission of the publisher. The only exception is brief quotations in printed reviews.

First Edition - 1992
Second Edition - 2011

Published by:
**WORD OF CHRIST MINISTRIES**
No. 100/3, Nirmala Apartments
Medavakkam Tank Road, Kellys
Chennai 600 010 Tamil Nadu, India
Phone: 044-2661 3242/ 4264 0111
E-mail: christianliterature@gmail.com
www.wordofchrist.org.in

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| | முன்னுரை | vii |
| 1. | அன்பின் ஆழம் | 1 |
| 2. | மரணத்துக்குப் பின்...? | 7 |
| 3. | கைவிடாத நேசர் | 11 |
| 4. | பாவத்தின் அகோரம் | 15 |
| 5. | தாகம் தீர்க்கும் ஜீவ தண்ணீர் | 19 |
| 6. | ஆரம்பமல்ல – முடிவே பிரதானம் | 25 |
| 7. | ஜீவன் மரித்தது | 29 |

# முன்னுரை

சென்னையிலிருந்து திருநெல்வேலிக்குப் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். ரயில் வண்டி நான் இறங்க வேண்டிய இடத்தை நெருங்கிக்கொண்டிருந்தது. ஒரு சிலரே நான் இருந்த பெட்டியில் இருந்தனர்.

பரந்த முகமும், அமரிக்கையான தோற்றமும் உடைய நடுத்தர வயது உடைய ஒருவர் என் முன் அமர்ந்திருந்தார். நெற்றியில் திருநீர் அணிந்து குங்குமப் பொட்டும் இட்டவராக காட்சியளித்த அவர் ஒரு சிவ பக்தர் என நினைத்தேன்.

அவருடன் கிறிஸ்துவின் அன்பை பகிர்ந்துகொள்ள விரும்பி, ஜெபத்துடன் தக்க தருணத்தை எதிர்நோக்கி இருந்தேன்.

அவராகவே என்னிடம் பேச ஆரம்பித்தார். அவருக்கு பதில் கூறும்பொழுதே, இயேசுக் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ரத்தினச் சுருக்கமாக எடுத்துரைத்தேன்.

புன்னகை புரிந்துகொண்டே, "**இந்த இயேசுவை எனக்குத் தெரியும்; அவரே என் இதய தெய்வம்; எனக்குள் அவர் உயிருடன் வாசம் செய்கிறார்**" என்று கூறியதோடு, யாரோ ஒரு பக்தன் பாடிய ஒரு கவிதையையும் எடுத்துரைத்து, தெய்வீக அன்பின் ஆழத்தை இக்கவிதையில் உணர்ந்தேன். இதை எழுதியவர் யாரென்று எனக்குத் தெரியாது. ஆனால் அதில் அடங்கிய பொருள் என்னை சிந்திக்க வைத்தது. என்னைக் கவர்ந்தும் கொண்டது" என்றார்.

அவர் சொன்ன கவிதையை நீங்களும் அறிந்துகொள்ள விரும்புகிறீர்களல்லவா?

கீழே படியுங்கள்:

"ஆவி களைய கூர் ஆணி அறைகையிலும்
பாவிகளை நொந்து பகைத்து சபிக்காமல்

மன்னிக்க வேண்டுமென மன்றாடி கேட்டதனால்
இன்றைக்கும் இருக்கின்றான் இயேசு பிரான் சாகாமல்''

நான் சொன்ன சுவிசேஷத்தை, சிறப்பான முறையில் எடுத்துரைக்கும் இக்கவிதை உண்மையில் என்னைப் பரவசமடையச் செய்தது. அது மட்டுமா?

சிவ பக்தர்போல காட்சி அளித்த என் நண்பர், சிறந்த இயேசுபக்தர் என்பதை அறிந்து, வந்தனம் கூறி, அவரிடம் விடைப்பெற்றேன்.

''வார்த்தை'' என்ற பெயரில் தேவனோடு இருந்தவர், மாமிசமும் இரத்தமும் உடைய மனிதனாக ''இயேசு'' என்ற பெயரில் பூமியில் அவதரித்தார்.

இயேசு கிறிஸ்து உலகில் ஜீவித்த காலத்தில் அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள் மக்களை கவர்ந்து கொள்ளும் தன்மையுடையனவாக இருந்தன.

ஆவியும், ஜீவனுமான வார்த்தைகளை அவர் பேசினார் அதிகாரமும், வல்லமையும் உடைய வார்த்தைகளைப்பேசினார். கிருபை பொருந்திய வார்த்தைகளைப் பேசினார். ஒருவரும் ஒருக்காலும் பேசாத வார்த்தைகளை இயேசு பேசினார்.

அவருடைய வார்த்தைகள் சத்தியமாயிருந்தன. பிணியாளிகளை குணமாக்கும் வார்த்தைகளைப் பேசினார். அசுத்த ஆவிகளைத் துரத்தும் வார்த்தைகளைப் பேசினார். மரித்தோரை உயிர்ப்பிக்கும் வார்த்தைகளைப் பேசினார். கட்டுண்டவர்களை விடுதலையாக்கும் வார்த்தைகளைப் பேசினார். இயேசுவின் வார்த்தைகளுக்கு இயற்கையும் கீழ்ப்படிந்தது. அன்புகனிந்த வார்த்தைகள் அவர் வாயிலிருந்து பிறந்தன. கடிந்து கொண்டும் பல வார்த்தைகளில் பேசினார். ஒருவரும் எதிர்பேசக்கூடாத வார்த்தைகளைப் பேசினார். தேவ இரகசியங்களைத் தம் வார்த்தைகளால் வெளிப்படுத்தினார். வீண் வார்த்தைகளை அவர் வசனித்ததில்லை. அநேக சமயங்களில் வாயைத் திறக்க, பேச மறுத்தார். உலக மக்களைப்போல அவர் பேசவில்லை; நம் சொந்த வார்த்தைகளை வசனிக்கவுமில்லை; தேவனுடைய வார்த்தைகளை, வேத வசனங்களையே பேசினார். அவருடைய வார்த்தைகள் வெறுமையாகத் திரும்பவில்லை. அவர் வாயிலிருந்து பிறந்த வார்த்தைகள் எக்காலத்துக்கும் உரியவை.

அவைகள் இன்று நமக்கும் தேவையே. ஊழிய நாட்களில் மட்டுமல்ல, சிலுவையிலும் பேசினார். சிலுவையில் பிறந்த அவரது வார்த்தைகளும்

ஆவியும், ஜீவனும் உடையவைகள். அவைகளை சிந்திப்பதும், தியானிப்பதும், செயல்படுத்துவதும் நமக்கு நன்மை தரும்.

சிலுவை மரத்தில் தொங்கின வேளையில் இயேசுவின் வாயிலிருந்து தொனித்த அவருடைய வார்த்தைகள், ஆழ்ந்த கருத்துடையவை. ஜெபத்துடன் நாமும் அவைகளை சிந்திக்கலாம்.

“ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்” (யோவா.8:51).

**Evan. D. A.** இராஜேந்திரம்
தபால் பெட்டி எண்:500
சென்னை – 600 007.

# அன்பின் ஆழம்

**"அப்பொழுது இயேசு; பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே"** (லூக்.23:24).

சிலுவையில் தம்மை அறைவதற்கு காரணமாய் இருந்தவர்களுக்காகவும், அறைந்தவர்களுக்காகவும், பரிந்து பேசும் வகையில் இவ்விதம் பிதாவாகிய தேவனிடம் வேண்டுதல் செய்தார்.

கொடிய வேதனைகளை அனுபவிக்கும் வேளையிலும் கூட, தம்மை பகைக்கிறவர்களுக்காக இயேசு ஜெபித்த இவ்வித அன்பு கனிந்த ஜெபம் நம்மைப் பரவசமடையச் செய்கிறது. அவருடைய இருதயத்தில் நிறைந்திருந்த தெய்வீக அன்பு, வார்த்தை வடிவாக இவ்விதம் வெளிப்பட்டது.

பகை, வெறுப்பு, மூர்க்கம், வெறிச்செயல் நிறைந்தவர்களாக தம்மைப் பழிவாங்கும் கொடூரமான இச்சூழ்நிலையிலும் கூட இயேசுவின் அன்பு மாறவே இல்லை.

**"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர் களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர் களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்"** (மத்.5:34).

என்று போதனை செய்த இயேசு, தமது போதனைகளை சாதனைச் செய்து நிரூபித்தார்.

இயேசுவையும் அவர் போதனைகளையும் பிரிக்க முடியாது. தாம் சாதனைப் புரிந்தவைகளையே அவர் போதித்தார்.

பாவிகளின் மீட்பை உண்டாக்கவே இயேசு உலகில் வந்தார்; பாவிகளை நேசிக்கிறேன் என்று உரைத்த இயேசு, தமது நேசத்தை கல்வாரிச் சிலுவையிலும் வெளிப்படுத்தினார்.

நாமும் மாமிசப்பிரகாரமாக, நம்மை விரோதிக்கும் நம்முடைய

சத்துருக்களை நேசித்து அவர்களுக்காக ஜெபிக்கும்படி, நமக்கு மாதிரியாக அவர் நடந்தார்.

**"இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள்"** (மத்.5:44).

நாமும் நம்மை தேவ புத்திரராக உலகில் விளங்கச் செய்யும்படி, இவ்வித அன்பை நம்மை விரோதிப்பவர்களிடம் செலுத்த கடமைப்பட்டு இருக்கிறோம்.

"உன் சத்துரு விழும்போது சந்தோஷப்படாதே; அவன் இடறும்போது உன் இருதயம் களிகூராதிருப்பதாக" (நீதி.24:17).

யோபு என்ற பக்தன் மேற்கூறிய அனுபவம் உடையவராக இருந்தார்.

"என் பகைஞனுடைய ஆபத்திலே நான் மகிழ்ந்து, பொல்லாப்பு அவனுக்கு நேரிட்டபோது களிகூர்ந்திருந்தேனோ?" (யோபு 31:29).

இயேசு சத்துருக்களுக்காக அன்புடன் பிதாவை நோக்கி வேண்டுதல் செய்ததோடு அவர்களுடைய அறியாமைக்காகவும் பரிதபித்தார்.

"தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்" என்றார்.

அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவு என்பதை அவர்கள் அறியவில்லை.

அன்புக்கு பூரணமானது என்பதை அவர்கள் அறியவில்லை. அன்புக்கு விரோதமான எந்தச் செயலும் ஆபத்தானது என்பதை அவர்கள் அறியவில்லை. அன்பை மேற்கொள்ள ஒருவராலும் கூடாது என்பதை அவர்கள் அறியவில்லை அன்பாகிய இயேசுவுக்கு விரோதமான தங்கள் செயல்கள் தங்களுக்கே அழிவைக் கொண்டு வரும் என்ற உண்மையை அவர்கள் அறியவில்லை.

தம்மை விரோதித்து செயல்படும் ஜனங்கள் தங்களுக்குத் தாங்களே அழிவைத் தேடுகிறார்களே என்ற உண்மையை இயேசு அறிந்திருந்ததால் அவர்களுக்காகப் பரிதபித்தார்.

நாமும் இந்த அறிவை உடையவர்களாக உலகில் ஜீவிக்க வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்.

அன்பைவிடப் பெரியது ஒன்றுமில்லை.

இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்துக்குக் காரணமாயிருந்த அவருடைய சத்துருக்கள் யார்?

ரோம.5:8–10 வசனங்களை வாசித்தால் இதன் உண்மை விளங்கும்.

“நாம் பாவிகளாகவும், தேவனுக்குச் சத்துருக்களாகவும் இருக்கையில், கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மீது வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்”

நானும் நீங்களுமே தேவனுக்குச் சத்துருக்களாகவும், பாவிகளாகவும், இருந்தோம்; நம்முடைய பாவங்களே தேவகுமாரனை சிலுவையில் அறையக் காரணமாய் இருந்தது; தேவனுக்கு சத்துருக்களாக இருந்த நம்மை அழித்துப்போடாமல், நம்மை நேசித்தபடியால் நம்மை அவரோடு ஐக்கியப்படுத்தும்படிக்கே, தமது குமாரனாகிய இயேசுவை, நமது பாவங்களின் நிமித்தம் சிலுவைப்பாடு, மரணத்துக்கு ஒப்புக்கொடுத்து, நம்மீது அவருக்குள்ள தெய்வீக அன்பை வெளிப்படுத்தினார்.

பாவிகளான நமக்காக தன்னை ஜீவபலிக்காகக் கொடுத்து, நம்மையும் தேவனுடைய பிள்ளைகளாக மாற்றும்படி நம்மீது அன்புகூர்ந்த இயேசுவின் அன்பு இணையற்றது. அளவிடப்படக்கூடாதது.

பாவிகளாகவும், சத்துருக்களாகவும் ஜீவிக்கும் ஒவ்வொருவருக்காகவும் இயேசு அன்பினால் நிறைந்து தம்மை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார்.

நாமே அவருக்கு சத்துருக்களாயிருந்ததால், நம்மை மன்னிக்கும்படிக்கு இயேசு பிதாவிடம் வேண்டிக்கொண்டார்.

இன்றும் அவர் உங்களை நேசிக்கிறார். உங்கள் மீது தமது அன்பை செயல்படுத்துகிறார்; நீங்கள் தேவனுக்கு விரோதிகளாயிருப்பதை அறிந்து இன்றாவது அவருடன் ஐக்கியமாகும்படி, இயேசுவின் அன்பு உங்களுக்காகப் பரிந்து பேசுகிறது.

“பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இனன்தென்று அறியாதிருக்கிறார்கள்”

பாவிகளை நேசிக்கும் இயேசுவின் அன்பைக் குறித்து நாம் சரியான அறிவை அடைவது அவசியம்.

நாமும் சத்துருக்களாகத் தோன்றும் நமது சகோதரர்களைச் சிநேகிக்க வேண்டும். சத்துருவை சபியாதே (யோபு 31:30).

சத்துருவின் பொருட்களை கவனி (யாத்.23:4, 5).

யோபு பகைஞரின் ஆபத்தில் களிகூரவில்லை (31:29).

சாலமோன் சத்துருக்களின் பிராணனைக் கேட்கவில்லை (3 இரா.3:11).

இதைச் செய்யாதே; அப்படி நடக்காதே அங்கே போகாதே; இவ்விதம் பேசாதே என்று பல கட்டளைகளை உலகத்தில் அன்புகூறுகிறவர்கள் கூறுவதுண்டு (DONT'S).

அவ்விதமே இதை நீ செய்தாக வேண்டும்; தந்து தான் ஆக வேண்டும், வாங்கினால் தான் விடுவேன்; என்று பல காரியங்களைச் செய்யும்படி உலக அன்பு வற்புறுத்துவதை நாம் அறிவோம்.

ஆனால் இயேசுவின் தெய்வீக அன்பு வித்தியாசமானது "நான் உன்னை நேசிக்கிறேன், நீ என்னிடத்தில் அன்பாயிரு" என்று மட்டும் நம்மைக் கேட்கிறது. அது வற்புறுத்துவதுயில்லை.

அன்பு, அன்பையே நாடுகிறது. **(Love demanda Love alone)** வேறு ஒன்றை ஈடாகக் கொடுத்து, அன்பைப் பிரியப்படுத்த முடியாது!

"நேசம் மரணத்தைப்போல் வலிது; நேச வைராக்கியம் பாதாளத்தைப் போல் கொடியதாயிருக்கிறது; அதில் தழல் அக்கினித் தழலும், அதின் ஜுவாலை கடும் ஜுவாலையாயுமிருக்கிறது.

திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்கமாட்டாது. வெள்ளங்களும் அதைத் தணிக்கமாட்டாது. ஒருவன் தன் வீட்டிலுள்ள ஆஸ்திகளை யெல்லாம் நேசத்துக்காகக் கொடுத்தாலும் அது முற்றிலும் அசட்டை பண்ணப்படும்" (உன்.8:6, 7).

நல்லவர்களை மட்டுமல்ல, தீயோரையும், பாவிகளையும் துரோகிகளையும் ஒன்றுபோல் அவர் நேசிக்கிறார் என்ற உண்மையையும் கூட நாம் அறிந்திருக்கவேண்டும்.

நாம் நல்லவர்களாக நடக்கும்பொழுதும். நன்மை செய்யும்பொழுது மட்டுமல்ல. பொல்லாதவர்களாக மாறினாலும், துரோகம் பண்ணினாலும் பாவத்தில் விழும் சமயங்களிலும் கூட இயேசுவின் அன்பு மாறுவதேயில்லை; அவர் அன்பைச் செலுத்த தவறுவதில்லை.

இது எப்படி? என்ற ஒரு கேள்வி நம்மில் உண்டாகலாம்.

சிலுவையில் அறையப்பட்ட இயேசுவோடு மற்றும் இரண்டு கள்வர்களும் அறையப்பட்டிருந்தனர். அவர்களில் ஒருவன் இயேசுவை இகழ்ந்தான். நிந்தித்தான் தகாதவிதமாகப் பேசினான்; ஆனால் அடுத்த கள்வனோ அவரை நேசித்து அவருடைய அன்பையும், உதவியையும் நாடினான்;

ஆசீர்வதிக்கப்பட்டவனாக மரித்தான்.

இதில் அடங்கியிருக்கும் உண்மை, நம் கவனத்திற்குரியது.

மின்சாரத்தின் சக்தியும், வல்லமையும் பாய்ந்தோட, இரு துருவங்கள் (+) (–). ஒன்றாக இணைக்கப்படுவது அவசியம். அவ்விதமே தெய்வீக அன்பு இடைவிடாது நம்மீது சொரிந்து கொண்டுதானிருக்கிறது. ஆனால் நாமோ அந்த தெய்வீக அன்பின் வல்லமை நம்மில் பாய்ந்து ஓட முடியாதவாறு, அந்த இணைப்பிலிருந்து பிரிந்துவிட்டோம். நாம் இணைப்பிலிருந்து பிரிந்து விட்டதால், தெய்வீக அன்பு விலகியதாக எண்ணக்கூடாது. நாம்தான் விலகிவிட்டோம்.

திரும்பவும் நாம் அந்த இணைப்பில் நம்மை ஈடுபடுத்திக்கொண்டால், அதே வினாடி முதல் தெய்வீக அன்பின் வல்லமை நம்மீது பாய்ந்து, நம்மையும் ஆசீர்வதிக்கும்.

அவ்விதமே தேவனை அறிந்திருந்தும், பின்மாற்றத்தினால் இணைப்பிலிருந்து விடுபட்டு மரண தண்டனை அடைந்த ஒருவன். திரும்பவும், தன்னை அன்புடன் இணைத்துக்கொண்டான்; உடன்தானே ஆசீர்வதிக்கப்பட்டான்!

நான் உன்னை நேசிக்கிறேன் என்று இயேசு உங்களிடம் கூறும்பொழுது, அவரிடம் அன்பு செலுத்துகிறீர்களோ, அப்பொழுதெல்லாம் அவருடைய அன்பு உங்களில் பாய்ந்தோடும், இயேசுவின் அன்பில் உங்களுக்குத் தேவையான சகல நன்மைகளும், பாதுகாவலும், பராமரிப்பும், சந்தோஷமும், சமாதானமும், வல்லமையும், இன்பமும் சம்பூரணமாக அடங்கியிருக்கிறது. இப்பொழுதே உங்கள் பின்மாற்றத்திலிருந்து திரும்பி இயேசுவின் அன்புடன் இணைத்துக் கொள்ளுங்கள். உடன்தானே உங்கள் வாஞ்சையும், விருப்பமும் நிறைவேறுவதைக் காண்பீர்கள்!

"ஆவி களைய கூர் ஆணி அறைகையிலும்
பாவிகளை நொந்து பகைத்து சபிக்காமல்
மன்னிக்க வேண்டுமென மன்றாடிக் கேட்டதனால்,
இன்றைக்கும் இருக்கின்றான் இயேசுபிரான் சாகாமல்."

# மரணத்துக்குப் பின் . . .?

"இன்று நீ என்னுடனே கூட பரதீசில் இருப்பாய்" (லூக்.23:43).

சிலுவைமரத்தில் அறையுண்டவராகத் தொங்கும் இயேசுவின் அருகில், மற்றொரு சிலுவையில் அறையப்பட்டிருந்த கள்ளனின் வேண்டுதலுக்கு பதிலளிக்கும் வகையில் இவ்விதம் கூறினார்.

இந்தக் கள்வன் இயேசுவை நன்கு அறிந்திருந்தான். இயேசுவின் சீடர்களுக்குத் தெரிந்திராத அநேக உண்மைகளை இவன் நன்கு அறிந்திருந்தான் (லூக்.23:40 – 43).

1. இயேசு தகாத ஒன்றையும் நடப்பிக்கவில்லை.

2. நியாயமற்ற தண்டனை அனுபவிக்கிறார்.

3. தன்னுடன் சிலுவையில் தொங்கும் இயேசு பரலோக இராஜ்யத்தின் அதிபதி.

4. மரித்தாலும் அவர் திரும்பவும் உயிர்த்தெழுவார்.

5. தமது இராஜ்யத்தை ஸ்தாபிக்க திரும்பவும் உலகிற்கு இராஜாவாக வருவார்.

6. தானும் ஒருநாள் உயிர்த்தெழும்புவேன்.

7. தன்னுடைய தண்டனைகளுக்காக தான் தண்டிக்கப்படுவதை அறிந்து, தேவனுக்கு பயந்தவனாக தன்னை அர்ப்பணம் செய்தான்.

இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் முதலாய் இந்த உண்மைகளை விசுவாசித்து செயல்படவில்லை! (லூக்.24:25 – 27, 38, 39, 44 – 46).

ஆயினும் இக்கள்வன், அகாலமரணமாகிய சிலுவை மரணத்தை அடைந்தான். இயேசு கிறிஸ்துவின் பேரிலுள்ள ஐக்கியத்தைவிட்டு, உலகத்தோடும், உலகமனிதரோடும் அவன் ஐக்கியம் கொண்டதால், பின்மாற்றமடைந்தான்.

உலகத்திலும் உலகத்திலுள்ளகைகளிலும் அன்புகூராது இருங்கள், என்பதே தேவனுடைய பிள்ளைகளுக்கு தேவன் அளிக்கும் கட்டளை.

உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. இரட்சிக்கப்பட்டவர்கள், இயேசுவுடன் ஐக்கியம் கொண்டு, அவருடைய அன்பில் நிலைத்திருப்பது அவசியம். அப்படிப்பட்டவர்கள் தேவனுக்கென்று மிகுதியான கனிகளைக் கொடுப்பார் (யோவா.15:7–10).

மரணத்தருவாயில் தன் தவறுகளை அறிக்கை செய்து, வேண்டுதல் செய்த இக்கள்வனை இயேசு அங்கீகரித்தார்.

இயேசு அவனுக்கு அளித்த வாக்கின்படியே இயேசு கிறிஸ்துவின் ஆவியும், சிலுவையில் அவரை ஏற்றுக்கொண்ட கள்வனின் ஆவியும், மரணமடைந்த அன்றுதானே "பரதீஸ்" **(Paradise)** என்ற இடத்தை அடைந்தன.

இந்த "பரதீஸ்" என்ற உலகத்துக்கு "ஆபிரகாமின் மடி" (லூக்.16:22) என்று பெயரும் உண்டு.

உலகத்தின் ஒளியாகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, மரணமடைவோரின் ஆவிகள் பரதீஸ் என்ற இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு இளைப்பாறுகின்றன.

அவ்விதமே இயேசுவாகிய ஒளியை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மரணமடைந்தால் அவர்களுடைய ஆவிகள், "பாதாள உலகம்" **HADES** "ஆதிஸ்" என்ற இருள் நிறைந்ததும், ஒழுங்கற்றதும், அழுகையும், பற்கடிப்பும் நிறைந்த, இளைப்பாறுதலற்ற இடத்துக்குச் செல்கின்றன (யோபு 10:21, சங்.49:17–19, லூக்கா 16:22–24).

இவைகளைக் குறித்த முழுவிவரங்களை **"மோசம் போக்கும் பிசாசு"** என்ற புத்தகத்தில் வாசிக்கலாம்.

இயேசுவை நிந்தித்த மற்றொரு கள்ளன் "ஆதீஸ்" என்ற இடத்தை அடைந்திருப்பான் என்பதில் சந்தேகம் இல்லை.

இருளின், அந்தகாரக் கிரியைகளை வெறுத்து, விட்டுவிட்டு, ஒளியின் பிள்ளைகளாக இன்றே மாறும்படி இயேசு கிறிஸ்துவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வாயா? மரணத்துடன் மனித வாழ்வு முடிவடைதில்லை.

ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனிதருக்கு

நியமிக்கப்பட்டிருக்கிறது.

இயேசு, மரணம், பிசாசு, பாதாளம் ஆகியவைகளை ஜெயித்து, வெற்றி சிறந்தவராக கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்து இன்றும் ஜீவிக்கிறார். மரித்தோரிலிருந்து அவர் உயிருடன் எழுந்ததால், தேவ குமாரன் என்பதை உலகத்துக்கு தேவன் நிரூபித்திருக்கிறார். அதை ஒருவரும் மறுக்கமுடியாது.

உயிர்தெழுந்த தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள், மரித்தாலும், திரும்பவும் உயிர்ப்பிக்கப்படுவார்கள், உயிருடன் அவருடைய வருகையில் காணப்படும் அவருடையவர்கள் மரணத்தை வென்றவர்களாக, இயேசுவுடன் மகிமைக்குள் பிரவேசிப்பார்கள்.

தேவனுடைய இராஜ்யத்தை உங்களுக்கு அருளவே "இயேசு உங்களுக்காக பூமியில் வந்து பாடுபட்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தார்" என்பதை விசுவாசித்தால், நீங்களும் ஆசீர்வதிக்கப் படுவீர்கள்.

# கைவிடாத நேசர்

"ஸ்திரீயே, அதோ, உன் மகன், என்றார். பின்பு அந்த சீஷனை நோக்கி: "அதோ, உன் தாய்" என்றார். அந்நேரம் முதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்" (யோவா.19:26,27).

இயேசு கிறிஸ்து, சிலுவையில் அறையப்பட்டவராகத் தொங்கின வேளையில் அவருடைய அன்பின் சீஷன் அழைக்கப்பட்ட யோவானும், இயேசுவின் தாயாகிய மரியாளும் அவருடைய சிலுவை அருகே நின்று கொண்டு இருந்தனர்.

மற்ற சீஷர்களும், அவரிடம் நன்மை பெற்ற அனைவரும் ஓடி மறைந்தனர்.

"பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்" என்ற வேத வாக்கின்படி, இயேசுவிடம் உண்மையான அன்பு கொண்டிருந்த இவர்கள் மட்டும் பயமின்றி, அவரண்டை காணப்பட்டனர்!

மற்ற சீஷர்களைவிட, இயேசுவிடம் அதிக அன்புடையவராயிருந்த யோவானிடம் இயேசுவும் அதிக அன்புடையவராயிருந்தார்.

எந்த அளவிற்கு நாம் நமது அன்பை பிரதிபலிக்கிறோமோ அந்த அளவிற்கு அன்பு தன்னை நமக்கு வெளிப்படுத்தும்.

இயேசுவின் மரணவேளையில் அவருடைய தகப்பனாகிய யோசேப்பு முன்னதாகவே மரணமடைந்து இருந்தார். இயேசுவின் சகோதரர்களுக்கு, இன்னும் இயேசுவைப்பற்றிய சரியான அறிவும், வெளிப்பாடும் இல்லை எனலாம்.

ஆகையால்தான் இயேசு நமது தாயை, தமக்கு அன்பான சீடனாகிய யோவானிடம் ஒப்படைத்தார்.

ஒரு சமயத்தில் இயேசு தமது சீஷரை நோக்கி, "நீங்களும் (என்னை விட்டு) போய்விட மனதாயிருக்கிறீர்களோ? என்றார்.

சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே!

நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம்'' என்றான் (யோவா.6:66–69).

இவ்வித உறுதியான அறிக்கை செய்த பேதுருகூட இயேசுவை மறுதலித்து, பின்மாற்றம் அடைந்து, திரும்பவும் மீன்பிடிக்கச் சென்றதை அறிவோம்.

இயேசு காட்டிக்கொடுக்கப்பட்டபின்பு யோவானைத்தவிர மற்ற அனைவருமே, இயேசுவைக் கைவிட்டார்கள்.

ஒருவர் சீரும் சிறப்புமாக வாழும்போது அநேகர் நண்பர்களாவார்கள். அன்பு பாராட்டுவார்கள் சொந்தம் பாராட்டுவார்கள். அடிக்கடி வந்து சந்தித்து உறவாடுவார்கள்.

இது உலக இயல்பு. ஆனால் வியாதி, துன்பம், இடுக்கண் நிறைந்த வேளைகளில் உங்கள் நண்பர்களை, உறவினர்களை, சொந்தம் பாராட்டுகிறவர்களை சற்று கவனியுங்கள்.

உலக அன்பு எத்தகையது என்பது அப்பொழுது தான் விளங்கும்.

''மூன்று நாளைக்கு முன் நான் வியாதிப்பட்டபோது என் எஜமான் என்னைக் கைவிட்டான்'' (1 சாமு.30:13).

''என் சிநேகிதரும், என் தோழரும், என் வாதையைக் கண்டு விலகுகிறார்கள்; என் இனத்தாரும் தூரத்திலே நிற்கிறார்கள்'' (சங்.38:11).

''என் சகோதரரை என்னைவிட்டுத் தூரப்படுத்தினார். எனக்கு அறிமுகமானவர்கள் எனக்கு அந்நியராய்ப் போனார்கள்.

என் பந்து ஜனங்கள் விலகிப் போனார்கள். என் சிநேகிதர் என்னை மறந்துவிட்டார்கள்.

என் வீட்டு ஜனங்களும், என் வேலைக்காரிகளும் என்னை அந்நியனாக எண்ணுகிறார்கள்; அவர்கள் பார்வைக்கு நான் பரதேசியானேன்.

நான் என் வேலைக்காரனைக் கூப்பிடுகிறபோது அவன் எனக்கு உத்தரவு கொடான்; என் வாயினால் நான் அவனைக் கெஞ்சவேண்டியதாயிற்று.

என் சுவாசம் என் மனைவிக்கு வேறுபட்டிருக்கிறது: என் கர்ப்பத்தின் பிள்ளைகளுக்காகப் பரிதபிக்கிறேன்.

சிறுபிள்ளைகளும் என்னை அசட்டை பண்ணுகிறார்கள் நான் எடுத்தால் அவர்கள் எனக்கு விரோதமாகப் பேசுகிறார்கள்.

என் பிராணசிநேகிதர் எல்லோரும் என்னை வெறுக்கிறார்கள்; நான் சிநேகித்தவர்கள் எனக்கு விரோதிகளானார்கள்" (யோபு 19:13–19).

மிகவும் சிறப்புடன் வாழ்ந்த தாவீது இராஜாவுக்கும், யோபுவுக்கும் இவ்விதம் நேர்ந்ததென்றால், இது அனைவருக்கும் உரியதே.

உலகத்தில், மனிதன் தன்னுடைய நம்பிக்கையை வைத்திருக்கும் அனைத்துக் காரியங்களும் அவனை ஒருநாளில் கைவிடும் என்பது உண்மை. ஏனெனில் உலக அன்பு மாயமானது. மாறும் தன்மையுடையது; நிரந்தரமானதல்ல.

ஆனால் நம் தேவனோ மாறாதவர். மாறாத அன்புடையவர், ஒருபோதும் நம்மைக் கைவிடாதவர்.

"நாங்கள் அடிமைகளாயிருந்தோம்; ஆனாலும் எங்கள் அடிமைத்தனத்திலே எங்கள் தேவன் எங்களைக் கைவிடாமல்... ராஜாக்கள் சமுகத்தில் எங்களுக்கு தயை கிடைக்கச் செய்தார்" (எஸ்றா 9:9).

"அவர்கள் செவி கொடுக்க மனதில்லாமலும், அவர்களிடத்திலே நீர் செய்த உமது அற்புதங்களை நினையாமலும் போய், தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தி தங்கள் அடிமைத்தனத்துக்குத் திரும்பும்படிக்கு அவர்கள் கலகம்பண்ணி, ஒரு தலைவனை ஏற்படுத்தினார்கள். ஆகிலும் வெகுவாய் மன்னிக்கிறவரும், இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும் மகா கிருபையுமுள்ளவருமான தேவனாகிய நீர் அவர்களைக் கைவிடவில்லை" (நெகே.9:17).

"நான் முதல்விசை உத்தரவுசொல்ல நிற்கையில் ஒருவனும் என்னோடேகூட இருக்கவில்லை. எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள்; அந்தக் குற்றம் அவர்கள் மேல் சுமராதிருப்பதாக.

கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று, என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்காகவும், புறஜாதியாரெல்லாம் கேட்கிறதற்காகவும்; சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன்" (2 தீமோ.4:16–17).

இயேசு கிறிஸ்துவாகிய நம் தேவனுடைய கைவிடாத தன்மை எத்தகையது என்பதை உங்களால் விளங்கிக்கொள்ள முடிகிறதா?

மேற்கூறிய உண்மைகளை நீங்கள் கருத்துடன் சிந்தித்து தியானிக்கக்கூடுமானால் இயேசுவின் அன்பு எவ்விதம் உங்களைப் பற்றிப் பிடித்துச் செயல்புரிந்து வருகிறது என்ற உண்மையை விளங்கிக்கொள்வீர்கள்.

நீங்களும் அவரிடம் நிறைவான அன்புடன் செய்லபட தீர்மானிப்பீர்கள்.

"தன் தகப்பனைக் கொள்ளையடித்து, தன் தாயைத் துரத்திவிடுகிறவன். இலச்சையையும் அவமானத்தையும் உண்டாக்குகிற மகன்" (நீதி.19:26).

"தன் தகப்பனையும் தன் தாயையும் தூஷிக்கிறவனுடைய தீபம் காரிருளில் அணைந்துபோம்" (நீதி.20:20).

"உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவி கொடு; உன் தாய் வயது சென்றவளாகும் போது அவளை அசட்டைபண்ணாதே" (நீதி.23:22).

"... (பிள்ளைகள்) பெற்றோர் செய்த நன்மைகளுக்கு பதில் நன்மைகளைச் செய்யக் கற்றுக்கொள்ளக் கடவர்கள். அது நன்மையும் தேவனுக்கு முன்பாகப் பிரியமுமாயிருக்கிறது" (1 தீமோ.5:4; யாத்.20:12).

அன்பான வாசகரே, இயேசு நமக்குக் காண்பித்த மாதிரியை நாமும் பின் பற்றவது அவசியமல்லவா?

எல்லாவற்றிற்கும் மேலாக, நம்மைக் "கைவிடாத நேசம்" ஒருவர் நமக்கு இருக்கிறார் என்ற தைரியத்துடன் உங்களைத் திடப்படுத்திக்கொண்டு அவரிடத்தில் உங்கள் முழு இருதயத்தோடும் முழு பலத்தோடும், முழுச் சிந்தையோடும் அன்பு கூருவீர்களாக.

# பாவத்தின் அகோரம்

"ஆறாம்மணி நேரமுதல் ஒன்பதாம் மணி நேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு: **ஏலீ ஏலீ! லாமா சபக்தானி என்று மிகுந்த சத்தமிட்டு கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்**" (மத்.27:46–47).

இங்கே ஆறாம் மணி முதல் ஒன்பதாம் மணி நேரம் வரைக்கும் என்று எழுதப்பட்டிருக்கும் நேரம் பகல் 12 மணி முதல் மாலை 3 மணி வரை என்று குறிப்பிடுகிறது.

உலக முழுவதையும் மூடிக்கொண்ட இந்த அந்தகாரத்துக்கு காரணமென்ன?

"கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி அவரைப் பாடுகளுக்குட் படுத்தினார்" (ஏசா.53:10).

"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது..." (ஏசா.53:5).

உலக இரட்சகராக பூமியில் உதித்த இயேசு, உலக மக்களனைவரின் சகல பாவங்களையும் மீறுதல்களையும், அக்கிரமங்களையும் அவைகளின் பலனாக வரவேண்டிய சகலவித பாடுகளையும் தண்டனைகளையும், வேதனைகளையும், நோய்களையும் கல்வாரி சிலுவையில் தொங்கினவராக சுமந்து தீர்க்கும்படி, பிதாவாகிய தேவன் அனுமதித்தார்.

"நாம் அவருக்குள் தேவநீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரி.5:21).

உலகத்தோற்ற முதல், உலக முடிவுவரையுள்ள அனைத்து மக்களின் சகல பாவங்களும், உலகத்தின் ஒளியாகவும், வெளிச்சமாகவும் வந்த இயேசுவின் மீது சுமத்தப்பட்ட வேளையில், பாவ இருள் அவரை மூடிக்கொண்டது

எனலாம். உலகத்தின் ஒளியை இருள் மூடியதால் உலகமே, இருள் சூழ்ந்த நிலையை அடைந்தது!

பாவம் என்ன செய்கிறது என்பதை, இங்கு தெளிவாகக் காண்கிறோம்.

இயேசு இந்த உலகத்தில் ஜீவித்த காலத்தில் அவர் தமது பிதாவுடன் இடைவிடாத தொடர்பும் ஐக்கியமும் கொண்டு ஜீவித்தார்.

“நான் தனித்திருக்கவில்லை, நானும் என்னை அனுப்பின பிதாவுமாக இருக்கிறோம்” (யோவா.8:16).

“என்னை அன்பினவர் என்னுடனேகூட இருக்கிறார். பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால், அவர் என்னைத் தனியேயிருக்க விடவில்லை” (யோவா.8:29).

பிதாவாகிய தேவன் இயேசுவின் மீது அன்பாயிருந்தார். அவ்விதமே இயேசுவும் பிதாவிடம் அன்புகூர்ந்து பிதாவுக்கு பிரியமானவைகளைச் செய்து, பிதாவின் சித்தத்தை தினம்தோறும் நிறைவேற்றி வந்தார்.

இருவரிடமும் இருந்த அன்பின் இணைப்பு இடைவிடாத தொடர்புடையதாக இருந்தது.

ஆனால் திடீரென்று, இந்த இணைப்பு துண்டிக்கப்பட்டது! ஏன்?

“உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது” (ஏசா.59:2).

உலகமனைத்தோரின் பாவமும், பாவமறியாத இயேசுவை மூடியதால் அவர் பாவத்தால் மூடப்பட்டு பாவமாகவே காட்சியளித்தார் (2 கொரி.5:21).

பாவம், பிதாவாகிய தேவனுடைய முகத்தை மறைத்தது!

பாவம், தேவனுடைய நன்மைகளை இயேசுவுக்கு வரவிடாமல் தடுத்தது!!

பாவத்தினால், பிதாவோடு இருந்த அன்பின் இணைப்பு துண்டிக்கப்பட்டது!!!

நாமும் பாவத்திற்கு இடமளிக்கும்போது தேவனுடைய முகம் நமக்கு மறைக்கப்படுகிறது! தேவனுடைய நன்மைகள் தடைபடுகிறது!! நமக்கும் தேவனுக்கும் இருந்த இணைப்பு துண்டிக்கப்படுகிறது!!!

பாவம், உலகத்தின் ஒளியாகிய இயேசுவை மூடி மறைத்தது!

பாவம், தேவகுமாரனாகிய இயேசுவை கதறச் செய்தது!!

பாவம், இதுவரை அனுபவித்திராத பாடுகளையும், வேதனைகளையும் வியாதிகளையும் அனுபவிக்கச்செய்தது!!!

தேவகுமாரனாகிய இயேசுவுக்கு இந்த நிலை பாவத்தின் காரணமாக ஏற்பட்டதென்றால், மனிதராகிய நம்மில் பாவம் எவ்வளவு அகோரமாக செயல்படும் என்பதை சிந்தியுங்கள்.

பாவத்தின் அகோரத்தினால், பிதாவுடன் தமக்கிருந்த ஐக்கியம் துண்டிக்கப்பட்டதை அறிந்த இயேசு, உடன்தானே, அந்த ஐக்கியத்தை புதுப்பித்துக்கொள்ளும்படி கதறினார்.

நாம் பாவம் செய்யும்போது, தேவன் நம்மை விட்டு விலகுவதும் இல்லை; நம்மை தண்டிப்பதும் இல்லை என்ற மாபெரும் உண்மையை நாம் அறிந்திருக்கவேண்டும்.

நம்முடைய பாவங்களும், அக்கிரமங்களுமே தேவனிடமிருந்து நம்மைக் பிரிக்கிறது; நமக்கு வரவேண்டிய நன்மைகளைத் தடைசெய்கிறது; நம் வாழ்க்கையில் பலவித பிரச்சனைகளையும் சிக்கல்களையும் உண்டாக்குகிறது.

"உன் தீமை உன்னைத் தண்டிக்கும், உன் மாறுபாடுகள் உன்னைக் கண்டிக்கும், நீ உன் தேவனாகிய கர்த்தரை விடுகிறதும், என்னைப் பற்றும் பயம் உன்னிடத்தில் இல்லாமலிருக்கிறதும், எத்தனை பொல்லாப்பும் கசப்புமான காரியம் என்று உணர்ந்துகொள் என்று சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எரே.2:19).

"துன்மார்க்கனை அவனுடைய அக்கிரமங்களே பிடித்துக்கொள்ளும். தன் பாவக்கயிறுகளால் கட்டப்படுவான்" (நீதி.5:22).

"துன்மார்க்கன் தன் கைகளின் செய்கையிலே சிக்கிக்கொண்டான்" (சங்.9:16).

உங்கள் வாழ்க்கை இருளடைந்திருக்கிறதா? எதிர்பார்த்த நன்மைகள் தடைபட்டிருக்கிறதா? எதிர்பாராத பிரச்சனைகளுடன் போராடுகிறீர்களா? பலவித காரியங்களில் சிக்குண்டு தவிக்கிறீர்களா? தாங்கமுடியாத பாடு – தண்டனை அனுபவிக்கிறீர்களா?

இன்று உங்களை தற்பரிசோதனை செய்து பாருங்கள். உங்கள் செய்கைகள், சிந்தைகள் மூலமாக நீங்கள் உங்களைத் தீட்டுபடுத்துவதால், இவைகள் உங்களுக்கு நேரிட்டிருப்பதை அறிந்து, ஒத்துக்கொண்டு, தேவ அன்பிலிருந்து பிரித்து, அந்நிய அன்புகளுக்கு இடமளித்தால் ஏற்பட்டிருக்கும் விபரீதங்களைப் புரிந்துகொண்டு, தேவனுடைய அன்புக்கு நேராகத் திரும்புங்கள்.

திரும்பவும் தேவனிடம் உங்களன்பைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

தேவனுடைய அன்புடன் நீங்கள் உங்களை இணைத்துக்கொண்டால், உடன்தானே.

உங்கள் இருள் வெளிச்சமாக மாறும் உங்கள் நன்மைகள் உங்கள் மேல் வரும் பிரச்சனைகள் அற்றுப்போகும். சிக்கல்களிலிருந்து விடுதலை பெறுவீர்கள் தண்டனைகள், வேதனைகள் நீங்கி சுகமுண்டாகும்.

கைவிடாத நேசராகிய இயேசுவை உலகம் அறியாதிருந்தது (யோவா.1:10).

அவருடைய சொந்த ஜனங்கள் கைவிட்டனர் (யோவா.1:11).

பிதாவும் கூட கைவிட்டது போல காணப்பட்டது. உலகத்தின் ஒளியாகிய இயேசு பாவ இருளை மேற்கொண்டு திரும்பவும் இருளை வெளிச்சமாக்கினார். பாவத்தின் அகோரத்தை சுமந்து நம்மை விடுவித்தார். அவர் இன்றும் நம்மை நேசிக்கிறார். அவருடைய அன்பில் நிலைத்திருப்போமாக.

# தாகம் தீர்க்கும் ஜீவத்தண்ணீர்

**“எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக தாகமாயிருக்கிறேன் என்றார்”**
(யோவா.19:28).

“கன்மலையிலிருந்து நீரோட்டங்களைப் புறப்படப்பண்ணி, தண்ணீரை நதிபோல் ஓடிவரும்படி செய்த தேவன்” (சங்.78:16). தாகமாயிருக்கிறேன் என்றார்.

சிலுவையில் அறையப்பட்டவராக உயிர் நீத்துக்கொண்டிருக்கும் இயேசு, தாகமானார் என்று மட்டும் இங்கு எழுதப்படாமல், “வேதவாக்கியம் நிறைவேற்றத்தக்கதாக தாகமாயிருக்கிறேன்” என்றார் என்று எழுதப்பட்டிருப்பதை கவனியுங்கள்.

பிதாவாகிய தேவனால் அனுப்பப்பட்டவராக இயேசு பூமியில் வந்தார். பூமியில் பிறந்து, வளர்ந்து, ஊழியம் செய்யும் தகுதியடையும்படி ஞானஸ்நானம் பெற்று ஆவியால் நிரப்பட்டார்.

தன்னை பூமிக்கு அனுப்பின பிதாவாகிய தேவன், தன்னைக்கொண்டு என்னென்ன காரியங்களைச் செய்யவேண்டும் என்றும் என்னென்ன வார்த்தைகளைப் பேசவேண்டும் என்றும் கற்பித்தாரோ அவைகளையே செய்யவும், அவைகளையே பேசவும் தன்னை அர்ப்பணம் செய்திருந்தார்.

தன்னைக் குறித்த பிதாவின் சித்தம் இன்னது என்பதை (i) வேதவாக்கியங்களின் மூலமாகவும் (ii) பிதாவோடு இடைவிடாத தொடர்பும் ஐக்கியம் கொண்டு ஜீவிப்பதன் மூலமாகவும், அறிந்து, தினமும் கிரியை செய்தார். பேசினார்.

இந்த உண்மைகளை நாம் அறிய வேண்டுமானால் இவைகளைக் குறித்த வேதவசனங்கள் நமக்கு தெரிந்திருக்கவேண்டும்.

அடியிற் குறிப்பிட்ட ஒரு சில வேத வசனங்கள் மூலம், இந்த உண்மைகளை நீங்கள் விளங்கிக் கொள்ளமுடியும்.

“இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என் உபதேசம் என்னுடையதா

யிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது'' (யோவா.7:16).

''நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு மெய்யாய் இருக்கிறது'' (யோவா.5:30).

''நான் என் பிதாவினிடத்தில் கண்டதைச் சொல்லுகிறேன்'' (யோவா.8:38).

...''நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார் '' (யோவா.14:10).

''... நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது'' (யோவா.14:24).

''ஆதலால் இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்'' (யோவா.8:28).

''என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்'' (யோவா.6:38).

''பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தபடியே செய்கிறார்'' (யோவா.5:19).

அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் அவரிடத்தில் கொடுக்கப்பட்டது. அவர் புஸ்தகத்தை விரித்தபோது:

''கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார், தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்,

கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார் என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு,

வாசித்து, புஸ்தகத்தைச் சுருட்டி பணிவிடைக்காரரிடத்தில் கொடுத்து உட்கார்ந்தார். ஜெப ஆலயத்திலுள்ள எல்லாருடைய கண்களும் அவர் மேல் நோக்கமாயிருந்தது.

அப்பொழுது அவர் அவர்களோடே பேசத் தொடங்கி உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று என்றார்" (லூக்.4:21; ஏசா.61:1–3).

தன்னைக் குறித்து வேதத்தில் எழுதப்பட்டிருக்கும் வேத வசனங்கள் அனைத்தும் தன்னில் நிறைவேறித் தீரவேண்டும் என்ற குறிப்பிட்ட நோக்கத்துடன் மிகுந்த கவனமாக இயேசு பூமியில் செயல்பட்டதைக் காணலாம்.

அவர் சிலுவையில் தொங்கும்போது தாகமாயிருக்கிறேன் என்ற வார்த்தையை கேட்டவர்கள் அவருக்கு கசப்பு கலந்த காடியைக் கொடுத்தார்கள் என்ற விஷயம் முன்னதாகவே வேதத்தில் முன்னுரைக்கப்பட்டிருந்ததால், அந்த வேதவாக்கியம் தன்னில் நிறைவேறும்படி, இயேசு "தாகமாயிருக்கிறேன்" என்றார்.

அவருடைய ஊழிய காலத்தில் அவர் சமாரியா நாட்டு ஸ்திரீயிடம் "தாகத்துக்குத்தா" என்றார்.

"சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி, நீர் யூதனாயிருக்க சமாரியா நாட்டு ஸ்தீரியாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா என்ற எப்படிக் கேட்கலாம் என்றாள்.

இயேசு அவளைப் பார்த்து உன்னிடத்தில் பேசுகிற நான் இன்னார் என்று நீ அறிந்திருந்தால் நீயே என்னிடம் கேட்டிருப்பாய். நான் உனக்கு ஜீவதண்ணீரைக் கொடுத்திருப்பேன் என்றார்.

நான் கொடுக்கிற தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்" (யோவா.4:8–14).

"அவர்கள் என் ஜனத்தின் பாவத்தை தின்று, அவர்கள் அக்கிரமத்தின் பேரில் பசிதாகமாயிருக்கிறார்" (ஓசி.4:8).

இன்றைய உலகமக்களின் நிலை இதுவே! ஒவ்வொருவரும், பாவச் செயல்களில் பசியும், தாகமும் கொண்டு, இரவுபகலாக அலைந்து திரிகிறார்கள்.

இந்த சமாரியா ஸ்திரீ அநேக ஆண்களுடன் ஜீவித்தும், அவளுடைய சிற்றின்பத்தின் தாகங்கள் தீர்க்கப்படாதவளாயிருந்தாள்.

உலக இன்பங்களில் மயங்கி அவைகளின் மீது பசி, தாகம் கொண்டு அலைந்து திரியும் மக்களின் தாகத்தை ஜீவ ஊற்றாக வந்த இயேசு, தம்மை விசுவாசிக்கிறவர்களின் உலகத்திலுள்ள இன்பங்களின் தாகத்தை தீர்க்கும்படி, சிலுவையில் தாகமடைந்தவராய் தொங்கி ஜீவனைக் கொடுக்க வேண்டும் என்பது பிதாவின் சித்தமாக இருந்தது.

"எவ்விதம் நாம் சாபத்திலிருந்து விடுதலைபெற அவர் நமக்காக சாபமாக்கப்பட்டாரோ" (கலா.3:13).

எவ்விதம் நாம் நீதிமான்களாக்கப்படும்படி அவர் நமக்காகப் பாவமாக்கப்பட்டாரோ (2 கொரி.5:21).

எவ்விதம் நாம் சமாதானத்தையடையும்படி அவர் நமக்காக காயப்பட்டு, நொறுக்கப்பட்டு, ஆக்கினையடைந்தாரோ (ஏசா.58:5).

எவ்விதம் நாம் ஐசுவரியவான்களாகும்படி அவர் நமக்காக தரித்திரரானாரோ (2 கொரி.8:9).

எவ்விதம் நம்மை நமது பொல்லாங்குகளிலிருந்து விலக்கி, நம்மை ஆசீர்வதிக்கப்படும்படி திரும்பவும் உயிர்த்தெழுந்தாரோ (அப்.3:26).

அவ்விதமே நம்மை உலகத்தின் இன்பங்களாகிய பசி, தாகத்திலிருந்து விடுதலையாக்கும் படிக்கும் நமது தாகம் தீர்க்கப்படும் படிக்கும், அவர் நமக்காகத் தாகமானார் (உபா.28:48).

"பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு; ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்"

வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.

தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார்" (யோவா.7:37–38).

"ஒரே ஆவியினாலே தாகம் தீர்க்கப்பட்டோம்" (1 கொரி.12:13).

நம்முடைய தாகம் தீர்க்கப்படும்படி இயேசு நமக்காகத் தாகமடைந்ததோடு தாகம் தீர்க்கும் ஜீவநதியாகிய பரிசுத்த ஆவியை

நமக்காக அனுப்பினார்.

அன்பான வாசகரே, உலகத்தின் ஆசாபாசங்களின் தாகம் உங்களில் தீர்க்கப்பட்டு இருக்கிறதா?

தேவனுடைய பரிசுத்தாவியின் பரிபூரண நிறைவில் தினமும் ஜீவிக்கக் கற்றுக்கொண்டால் மட்டுமே, இது உங்களுக்கு சொந்தமாகும்.

"ஆவியில் நிறைந்திருங்கள்" என்ற கட்டளையை உங்களில் தினமும் நிறைவேற்றுங்கள். தாகம் தீர்க்கப்படுவீர்கள்.

நீங்களும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு உலகத்தில் அனுப்பப்பட்டிருக்கிறீர்கள்.

இவ்வுலகில் நீங்கள் உயிருடன் ஜீவிக்கும் காலமெல்லாம், உங்களை குறித்த தேவசித்தம் உங்கள் மூலம் நிறைவேறும்படி இயேசுவுடன் இடைவிடாத ஐக்கியம்கொண்டு அவருடைய அன்பின் நிலைத்திருங்கள்.

அப்பொழுது தேவ சித்தப்படி நீங்கள் பூமியில் கிரியை செய்யவும் தேவனுக்கென்று நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுக்கவும், பிதாவாகிய தேவன் உங்களை ஆசீர்வாதித்து, உபயோகிப்பார்.

# ஆரம்பமல்ல – முடிவே பிரதானம்

"இயேசு காடியை வாங்கின பின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்ந்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார்" (யோவா.19:30).

"முடிந்தது" என்று சிலுவையில் உரைத்த வாக்கு. ஒரு வெற்றியின் தொனியாகக் கருதவேண்டும்.

என்ன நோக்கத்துடன் இயேசு பூமிக்கு பிதாவினால் அனுப்பப்பட்டாரோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றி முடித்தேன் என்பதே அதன் அர்த்தம்.

யோவா.19:28ல் "அதன் பின்பு எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து..." என்று எழுதப்பட்டிருப்பதால் பிதா தனக்குச் செய்யும்படி நியமித்தவைகளைத் தான் செய்து முடித்தேன் என்ற வெற்றி வார்த்தையை இயேசு உரைத்தார்.

"ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதன் முடிவு நல்லது" (பிர.7:8).

சிலர் தங்கள் காரியங்களை ஆரம்பம் செய்வார்கள்; ஆனால் முடிக்கமுடியாமல் இடையில் விட்டு விடுவார்கள்.

தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும், தேவன் தங்களோடிருக்கிறார் என்பதை, ஆரம்பித்த காரியத்தைச் செய்து முடிப்பதன் மூலம் நிரூபிக்கவேண்டும்.

"செரூபாபேலின் கைகள் இந்த ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட்டது; அவன் கைகளே இதை முடித்துத் தீர்க்கும்; அதினால் சேனைகளின் கர்த்தர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார் என்று அறிவாய்" (சகரி.4:9).

இயேசுக்கிறிஸ்து இந்த உலகில் ஊழியம் செய்த நாட்களில் தன்னைக் கொண்டு நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் அவருக்குக் கற்பித்ததும் செய்து வருகிறதுமான கிரியைகள் அவர் பிதாவான தேவனால் அனுப்பப்பட்டவர் என்று தன்னைக் குறித்து காட்சி கொடுப்பதை அறிந்திருந்தார் (யோவா.5:36).

தன்னை அனுப்பின பிதாவின் சித்தம் நிறைவேற்றப்படுவதிலேயே கண்ணும் கருத்துமாக இயேசு செயல்புரிந்தார்.

"இயேசு அவர்களை நோக்கி, நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து, அவருடைய கிரியை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" (யோவா.4:34) என்றார்.

நாமும் கூட தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக பூமிக்கு அனுப்பப்பட்டிருக்கிறோம் என்ற உண்மை நமக்குத் தெரியவேண்டும்.

நம்மைக் கொண்டு நிறைவேற்றப்பட வேண்டிய காரியங்களை, தேவனோடு நாமும் தொடர்பும் ஐக்கியமும், கொண்டு, அவைகளை அறிந்து செய்து முடிப்பது நமது கடமையல்லவா?

ஆவியினாலே ஆரம்பம் பண்ணின நீங்கள் இப்பொழுது மாமிசத்தினாலே முடிவுபெறப் போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா?"(கலா.3:3) என்று பவுல் கலாத்தியரைக் கேட்கும் கேள்வி இன்று நம் காதுகளில் தொனிக்கட்டும். அன்பில் ஆரம்பித்து இச்சையடக்கத்தில் முடிப்பதே ஆவியின் கனியின் அனுபவம் (கலா.5:22).

ஆவியில் ஆரம்பித்த நீங்கள் மாமிசத்தில் ஓடுகிறீர்களா?

"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" (2 தீமோ.4:7) என்ற சாட்சி நமக்கும் உண்டாகட்டும்.

சிலுவையில் இயேசு வெற்றி சிறந்தவராக தமது ஓட்டத்தை முடித்தார்.

"உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாமிச விருத்த சேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே கூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து;

நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்தகையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடி எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து;

துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரித்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார்" (கொலோ.2:13–15).

இவைகளைச் செய்து முடித்து, "முடிந்தது" என்றார் இயேசு.

பாவிகளை இரட்சிக்க உலகத்துக்கு வந்த இயேசு அந்த வேலையை செய்து முடித்தார் ( 1 தீமோ.1:15).

இரட்சித்தார் என்பது, மனிதரின் ஆவிக்குரிய சரீரப்பிரகாரமான பொருளாதரமான (Spiritual - Physical and matiral) சகல ஆசீர்வாதங்களையும் அவர்களுக்குக் கிடைக்கச் செய்யும் வேலையை நிறைவேற்றி முடித்தார்.

இரட்சிப்பை உண்டாக்க தாம் படவேண்டியபாடுகள் அனைத்தையும் பட்டு முடித்தார்.

அவர் செய்யும்படி பிதா நியமித்தவைகளைச் செய்து முடித்தார்.

தம்மை குறித்து முன்னுரைக்கப்பட்ட வேதவாக்கியங்களை நிறைவேற்றி முடித்தார்.

மரணத்துக்கு அதிகாரியமான பிசாசை அழித்து, சிலுவையின் மேல் தமது வெற்றியை நிறைவேற்றி முடித்தார்.

# ஜீவன் மரித்தது

**"இயேசு பிதாவே உம்முடைய கைகளில் என் கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்** என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்" (லூக்.23:46).

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்றுரைத்து இயேசு ஜீவனை விட்டார்.

ஜீவன் எப்படி மரிக்கமுடியும்? அது ஒரு கூடாத காரியமே. ஆனால் ஜீவன் மரிப்பது அவசியமாயிருந்தது.

அக்கிரமங்களிலும், பாவங்களிலும் மரித்து ஆவிக்குரிய ஜீவனை இழந்து மரித்தவர்களாக உலகில் வாழும் மக்கள் மெய்யான ஜீவனை திரும்பப் பெற்றுக்கொள்ளவும், அந்த ஜீவன் பரிபூரணப்படவும், இயேசு உலகில் வந்தார்.

தமது மரணத்தைக் குறித்தும், அதனால் கிடைக்கும் பலனைக்குறித்தும் கிரேக்க ஞானிகளுக்குத் தெரிவித்திருந்தார்.

"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்; செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்" (யோவா.12:24).

பிதாவாகிய தேவனும் அதைக்குறித்து வாக்குப்பண்ணியிருந்தார்.

"அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி; அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்கு கொள்ளையாகப் பங்கிட்டுக் கொள்வார்" (ஏசா.53:12).

ஆதாமின் பாவத்தினால் நீங்களும், நானும் உலகமனைத்திலுள்ளவர்களும் இழந்துவிட்ட ஆவிக்குரிய ஜீவனை திரும்பவும் பெற்று, அழியாத நித்திய ஜீவனைப் பெறவும், ஜீவன் மரணத்தை ருசிபார்ப்பது அவசியமாயிற்று (எபி.2:9).

இயேசுவின் மரணம் முன்குறிக்கப்பட்டிருந்தது. "உலகத்தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி" வெளி.13:8.

இயேசுவின் மரணம் இயற்கைக்கும் அப்பாற்பட்டது **(Super - nutural).** "இயேசு மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஆவியை விட்டார். அப்பொழுது தேவாலயத்தின் திரைச்சிலை மேல் தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது. பூமியும் அதிர்ந்தது; கன்மலைகளும் பிளந்தது. கல்லறைகளும் திறந்தது..." (மத்.27:51 – 52).

சாபக்கேடான சிலுவை மரணத்தை ஏற்றுக்கொள்ளும்படி இயேசு பிதாவுக்கு கீழ்ப்படிந்து சிலுவைமரண பரியந்தம் தம்மை தாழ்த்தினார் (பிலி.2:8).

"அவர் தம்மைத் தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப் போடப்பட்டது; அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப் போயிற்று" (அப்.8:33).

சிலுவையின் மரணபரியந்தம் தம்மை தாழ்த்தி தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்ததினால் அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம் (1 யோவா.3:16).

அவருடைய ஜீவனை மரணத்துக்குட்படுத்த ஒருவருக்கும் அதிகாரம் இருக்கவில்லை.

"நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார்" (யோவா.10:17).

ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக் கொண்டேன் என்றார்" (யோவா.10:18).

மனிதனை தேவன் நித்திய ஜீவவாசியாக சிருஷ்டித்தார். ஆனால், மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவன், பாவத்தின் மூலம் மரணத்தையும், மரணத்தையும் உண்டாக்கினான்.

"ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய

பிசாசானவனைத் தமது மாணத்தினாலே அழிக்கும்படிக்கும்.

ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்துக் குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார்'' (எபி.2:14–15).

இயேசு சிலுவையில் மரணத்துக்கு காரணமாயிருக்கும், ''மரணத்தின் கூர்'' என்றழைக்கப்படும் பாவத்தை முறித்துப் போட்டார்.

இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம் அவர் சிந்தின இரத்தம் ஆகியவைகளை எவர் விசுவாசித்து பாவமன்னிப்பை பெறுகிறார்களோ அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதால், மரணத்தின் கூர் அவர்களில் முறிந்து போவதால் இயேசுவின் நாமத்தில் பாவமன்னிப்பைப் பெறுகிறவர்கள். உடன்தானே மரணபயத்திலிருந்து விடுதலையடைகிறார்கள்.

மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசை இயேசு தமது சிலுவை மரணத்தால் ஜெயித்தார்.

இயேசு மரணத்தையும் பாதாளத்தையும் ஜெயித்தவராக மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்ததால் பலமாக ரூபிக்கப்பட்ட தேவகுமாரனாயிருக்கிறார்.

இன்று இயேசு உயிர்த்தெழுந்த கிறிஸ்துவாக ஜீவிக்கிறார்.

அவருடைய நாமத்தைவிசுவாசித்து அவருடைய இரத்தத்தினால் கழுவப்பட்ட அவருடையவர்களை பரலோக இராஜ்யமாகிய அழியாத நித்திய ஜீவனுக்குள் கொண்டுபோய் சேர்க்கும்படி நினையாத வேளையில் திரும்பவும் வருவார்.

அப்பொழுது அவருக்குள் மரித்த பரிசுத்தவான்கள் முதலாவது மரணத்தை வென்று கல்லறைகளிலிருந்து மகிமையின் சரீரத்தோடு உயிர்த்து எழும்பி அவரிடம் செல்வார்கள்.

அதைத் தொடர்ந்து பூமியில் உயிருடன் இருக்கும் அவருடைய பரிசுத்தவான்கள் மரணத்தை ஜெயமாக விழுங்கி, மகிமையின் மேல் மகிமையடைந்து கிறிஸ்துவை அடைவார்கள்.

மரணம் ஜெயமாக விழுங்கப்படும். இயேசு மரணத்தை ஜெயித்தார். அவரை விசுவாசிக்கிற அனைவரும் மரணத்தை ஜெயித்து மகிமையின் சரீரத்தில் உயிருடன் இன்றும் என்றுமாக அவருடன் ஜீவிப்பார்கள்.

''நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்''

''என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிருடன் இருந்து என்னை விசுவாசிக்கிறவன் மரிக்காமலுமிருப்பான்'' என்று இயேசு வாக்குப் பண்ணியிருக்கிறார்'' (யோவா.11:25, 26).

''மரித்தேன் ஆகிலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்'' (வெளி 1:18).

இவைகளை சாட்சியாக அறிவிக்கிறார்; மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும் (வெளி.22:20).

# சிலுவைத் தொனிகள்...

பொதுவாக ஒரு மனிதனின் மரணவேளையில் அவன் சொல்லும் கடைசி வார்த்தைகளுக்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம். இறந்தவரின் கடைசி விருப்பத்தை நிறைவேற்றுவதில் நாம் கருத்துள்ளவர்களாக இருக்கிறோம். நமது பின் சந்ததியினரும் அந்த வார்த்தைகளைக் காத்துக்கொள்கின்றார்.

சட்டத்தின்படியும் ஒரு மனிதனின் "மரண வாக்குமூலம்" (Dying Declaration) முக்கியத்துவம் பெறுகிறது. மரணவேளையில் அவன் சொல்லும் வார்த்தைகள் உண்மையானவை என்று சட்டத்தின்படி நம்பப்படுகிறது.

நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, நொறுக்கப்பட்டு, கொடிய வேதனையின் மத்தியில் மரணவேளையை எட்டிக் கொண்டிருந்த நேரத்திலும் இரட்சிப்பின் பணியைச் செய்யத் தவறவில்லை. அவரது ஊழிய காலத்தில் அவர் அளித்த நற்செய்திகளையும் நடைமுறையில் செய்துகாட்டி எல்லா வற்றையும் உள்ளடக்கி முழுமனுக்குலத்திற்கும் ஏழு வார்த்தைகளில் சொல்லிமுடித்தார். அந்த கடைசி வார்த்தைகளை நம்முடைய வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி அவர் இரண்டாம் முறை வரும்போது செய்து முடித்தவர்களாக அவர் முன்பாக நிற்கும் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள கரிசனையுள்ளவர்களாகயிருப்போம்.


*Best Compliments from*

தி சென்னை சில்க்ஸ்®
Let the celebrations begin!

ஸ்ரீ குமரன் தங்கமாளிகை